உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

நாள் :09.09.2025

அ.சா.2 - செல்வமணி S/o சொக்கன்

S.C. No. 71/2024

(சாட்சி மீண்டும் மனுவின் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் வாங்கப்பபட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற நாளன்று மறுநாள் எதிரிகளை எங்கள் தரப்பில் இருந்து சென்று தாக்கியதாகவும், முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு நாங்கள் தாக்க முற்பட்ட போது, 3ம் எதிரியின் அக்கா கருப்பாயி அவரின் மீது காயம் ஏற்பட்டு, இதுதொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அது பொய்வழக்காக கூட பதிவு செய்திருக்கலாம். அவ்வாறு எங்கள் தரப்பில் கைகலப்பில் ஈடுபட்ட போது தான் அ.சா.1 சரவணகுகன் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் நாளே எதிரிகள் அ.சா.1ஐ தாக்கியிருந்தால் முதல் நாளே புகர் கொடுக்கப்பட்டிருக்கும் என்றும் அது பொய் என்பதால் தான் சம்பவம் நடந்த மறுநாள் புகார் கொடுக்கப்படடது என்றால் சரியல்ல. அ.சா.1 அடிபட்டதால் உடனடியான மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டோம். என் மகன் தான் அழைத்து சென்றார். நான் செல்லவில்லை. மருத்துவமனைக்கு சென்று வந்தவுடன் புகார் கொடுத்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்தோம். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்திருந்தால் முதல் நாளே வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. முதல் நாள் அ.சா.1க்கு காயம் ஏற்படவில்லை என்றும், 2வது நாளில் எங்கள் தரப்பில் கைகலப்பில் ஈடுபட்ட போது ஏற்பட்ட காயத்தை வைத்து தான் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது

என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றும் என்னுடைய தூண்டுதலின் பேரில் முன்விரோதம் காரணமாக புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.09.09 17:59:26 +0530

Assistant Sessions Judge

Melur